புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜுன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# புறநானூற்றில் தனிமனித உளவியலும் சமூக உளவியலும்

முனைவர் சு. ரேணுகா தேவி
கௌரவ விரிவுரையாளர், தமிழ்த்துறை,
எம்.வி.எம்.அரசு மகளிர் கலைக்கல்லூரி, திண்டுக்கல்.

## முன்னுரை

எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாய் விளங்கும் புறநானூறு காலத்தால் மூத்தது; எனினும் கருத்தால் இளமை குன்றாது இருப்பது. மனித வாழ்க்கையைப் பொருளாகக் கொண்டு படிப்பவரின் சிந்தனைக்கும் உணர்வுக்கும் விருந்தாக அமைவது எனலாம். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழ்நாட்டில் மக்கள் கொண்டிருந்த வாழ்க்கை நிலை, சமூக அமைப்பு, பழக்கவழக்கங்கள், நாகரிகம், பண்பாடு, போர்ச் செய்திகள், அரசியல் நிலை, ஆடவர் ஆற்றல், பெண்டிர் பெருமை போன்றவற்றை நாம் எளிதில் புரிந்து கொள்வதற்குப் பெருந்துணையாக நிற்பது புறநானூறேயாகும். பழந்தமிழ் மக்களின் எண்ணச் செழுமையை உலகம் கண்டுகொள்ள ஒப்பற்ற கருவூலமாக விளங்கும் புறநானூற்றுப் பாடல்கள் சிலவற்றில் தனிமனித உளவியலும் சமூக உளவியலும் பின்னிப்பிணைந்து நிற்கும் பாங்கினைக் காணமுடிகிறது. அவற்றை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## இலக்கியமும் உளவியலும்

மனித மனத்தின் உணர்வுகள், மனிதனுடைய நடத்தைகள், மனித ஆளுமை ஆகியவற்றை விளக்குவது உளவியல் துறையாகும்.

தனிமனித மனத்தைக் கூறுபோட்டுப் பகுத்து ஆராய்வது தனிமனித உளவியல் என்பர். தனிமனித உளவியல் சமூகத்தில் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது. பல்வேறு கூறுகளை அடிப்படையாகக் கொண்டு செயல்படுகின்றது. ‘‘தனிமனிதனின் ஆழ்மனத்தில் உறைந்து இருக்கின்ற உணர்வுகளின் வெளிப்பாடு வாழ்வு உந்துதல்களாகவும் அழிவு உந்துதல்களாகவும் விளங்குகிறது. ஆளுமை(Personality), மனச்சிக்கல்கள்(Complexity), வாழ்வு உந்துதல், அழிவு உந்துதல், உளக்கோட்டம், உளக்கோளாறு, சுதந்திர உணர்வு, தன்னுணர்வு, தப்பித்தல் மனப்பான்மை, தற்காத்தல், எதிர்பார்ப்பும் ஏமாற்றமும், புறத்தெறிதல், மாற்றுத்தேடுதல், குற்றவுணர்வு, கனவு என்ற கூறுகள் தனிமனித உளவியலில் அடங்கும்’’ என்பார். (சிக்மண்ட் ப்ராய்டு உளப்பகுப்பாய்வு அறிவியல், இரவிச்சந்திரன்,தி.கு., ப.32)

‘‘சமூக உளவியல் என்பது உளவியலின் ஒரு பொதுப்படையான துறையாகும். தனிமனிதனுடைய நடத்தையை அவனுடைய சமூகச் சூழ்நிலையைக் கொண்டு ஒழுங்குமுறையாக ஆராய்வது’’ என்பார். (கல்வி உளவியல், நாகராஜன்,ப.16) தனிமனித நடத்தையும் சமூக நடத்தையும் இணைந்து சமூக உளவியல் வெளிப்படும் எனலாம்.

இலக்கியம் மனித வாழ்வின் அனுபவங்களையும் மனித நடத்தைகளையும் அவற்றின் வெளிப்பாடாகவும் உந்துதலாகவும் உள்ள மனதை ஆழமாகவும் அழகாகவும் சித்திரிக்க முனைகிறது. இலக்கியத்தைப் புரிந்து கொள்ளவும் படைப்பின் வழியாகத் தனிமனித மற்றும் சமூக மனத்தினைப் புரிந்து கொள்ளவும் படைப்பினை மேன்மேலும் சுவையூட்டக் கூடியதாக மாற்றவும் எனப் பல கோணங்களில் வைத்துப் பார்ப்பதற்கு உளவியல் துணை நிற்கிறது. தனிமனிதன் மற்றும் சமூகத்தின் பலமும் பலவீனமும் இதன் மூலம் அடையாளப்படுத்தப்படுகிறது.

*கைம்பெண்களின் நிலை*

*கைம்பெண்களின் நிலையினைப் பற்றி கூறும்போது அ.ச.ஞானசம்பந்தன், ''தனக்கென்று தனி வாழ்வு இல்லாமல், கணவனது வாழ்வே தனது வாழ்வாகவும், அவனது வீழ்ச்சியே தனது வீழ்ச்சியாகவும் கருதினள் இந்நாட்டுப்பெண். இந்நிலை பழைய நாளில் மட்டும் அன்றி, இன்றுங்கூட ஏறத்தாழ அப்படியேதான் இருக்கிறது. மரத்தைப் பற்றிப் படரும் கொடியின் வாழ்வு, அந்தக் கொடி விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், மரத்துடன் இணைந்தே உள்ளது. மரத்தை விட்டு வீழ்ந்துவிட்ட கொடியும் குடும்பத் தலைவனை இழந்த தலைவியின் வாழ்வும் ஏறத்தாழ இதே நிலைதான்'' என்பார்.(மகளிர் வளர்த்த தமிழ், அ.ச.ஞானசம்பந்தன். ப.39)*

*பூதப்பாண்டியன் மனைவி பெருங்கோப்பெண்டு, பூதப்பாண்டியன் இறந்த பிறகு அவனது ஈமத்தீயில் விழுந்து உடன்கட்டை ஏறத்துணிகிறாள். அவளோ பாண்டிய நாட்டின் மகாராணி. அவளைத் தடுத்த சான்றோர் கைம்மை நோன்பு நோற்று உயிர் வாழலாம் என்று வற்புறுத்துகின்றனர். அதற்கு அவள் கைம்மை நோன்பின் கொடுமையை எடுத்துக்கூறி, அவ்வாறு வாழ்வதிலும் சாவது மேல் என்கிறாள். இதனைக் கீழ்வரும் புறநானூற்றுப் பாடலடிகள் எடுத்தியம்புகின்றன.*

*பல்சான் றீரே! பல்சான் றீரே!*
*'செல்க' எனச் சொல்லாது 'ஒழிக' என விலக்கும்,*
*பொல்லாச் சூழ்ச்சிப் பல் சான்றீரே!*
*அணில் வரிக் கொடுங் காய் வாள் போழ்ந்திட்ட*
*காழ் போல் நல் விளர் நறு நெய் தீண்டாது,*
*அடை இடைக் கிடந்த கை பிழி பண்டம்*
*வெள்எட் சாந்தொடு புளிப் பெய்து அட்ட*
*வேளை வெந்தை, வல்சி ஆகப்,*
*பரற்பெய் பள்ளிப் பாயின்று வதியும்*
*உயவற் பெண்டிரேம் அல்லேம் மாதோ;*
*பெருங்காட்டுப் பண்ணிய கருங்கோட்டு ஈமம்*
*நுமக்குஅரிது ஆகுக தில்ல; எமக்குஎம்*
*பெருந்தோள் கணவன் மாய்ந்தென அரும்புஅற*
*வள்இதழ் அவிழ்ந்த தாமரை*
*நள்இரும் பொய்கையும் தீயும் ஓரற்றே! (புறம் 246)*

*பல்சான்றீரே! பல்சான்றீரே! என்னை என் கணவனோடு செல்லவிடாமல் தடுக்கின்ற பொல்லாத சூழ்ச்சிசெய்யும் பல்சான்றீரே! வெறும் வெள்ளரிக்காயும் நெய் ஊற்றாமல் கிண்டிய கீரையும் கஞ்சியும் எள் துவையலும் புளியூற்றி வேக வைத்த வேளைக் கீரையும் என இவற்றையே எல்லாப் பொழுதும் உணவாக உட்கொண்டு, பாய் இல்லாமல் பரல் கற்கள் நிரம்பிய தரையிலே படுத்து உறங்கி வாழும் கைம்பெண்ணாக யான் இருக்க விரும்பவில்லை! சுடுகாட்டிலே கருத்த விறகுகளை அடுக்கி உண்டாக்கிய ஈமத்தீயிலே வீழ்வது உங்களுக்கு வேண்டுமானால் அரிதாகத் தெரியலாம். எனது பெருந்தோள் கணவன் மாய்ந்தபின், எமக்குத் தாமரைப் பொய்கையும் தீயும் ஒன்றுதான்! என்று பாண்டிய நாட்டரசி பெருங்கோப்பெண்டு நவில்வதைக் காணமுடிகிறது.*

*இக்கருத்தை ஒத்த மற்றொரு பாடலை புறநானூற்றில் காணமுடிகிறது. கொடை மனமும், பொருள் வளமும் நிறைந்த பெருமகன் வீட்டிற்கு முன்பு சென்று வந்த அனுபவத்தையும் ஓராண்டுக்குப் பின் அவ்வள்ளல் இறந்த பின் அவன் மனைவி இருந்த நிலையினையும் தாயங்கண்ணியார் என்ற புலவர் பதிவுசெய்துள்ளார்.*

*''குய்குரல் மலிந்த கொழுந்துவை அடிசில்*
*இரவலர்த் தடுத்த வாயிற், புரவலர்*
*கண்ணீர்த் தடுத்த தண்ணறும் பந்தர்க்,*
*கூந்தல் கொய்து, குறுந்தொடி நீக்கி,*
*அல்லி உணவின் மனைவியொடு, இனியே*
*புல்என் றனையால் – வளங்கெழு திருநகர்!*
*வான் சோறு கொண்டு தீம்பால் வேண்டும்*

முனித்தலைப் புதல்வர் தந்தை
தனித்தலைப் பெருங்காடு முன்னிய பின்னே''. (புறம். 250)

தலைவனை இழந்து பொலிவிழந்து காணப்பட்ட இல்லத்தைப் பார்த்த புலவர், மாளிகையே, தாளிக்கும் ஓசை மிகுந்த திரண்ட துவையலுடன் கூடிய உணவுடன் இரவலரை மேற்செல்லாது தடுத்து உள்ளே வருமாறு அழைப்பாய். வருபவர் கண்ணீரை மாற்றி குளிர்ந்த மணமுடைய பந்தலையும் உடையதாய் முன்பு விளங்கினாய். ஆனால் இப்போது கூந்தலைக் களைந்தும் சிறிய வளையலை நீக்கியும் அல்லியரிசியாகிய உணவுண்ணும் மனைவியுடன் நீ இருந்து பொலிவழிந்தாய் என்று வருந்திப் பாடுகின்றார்.

இதில் கூந்தலைக் களைந்தும் வளையல்களை நீக்கியும் அல்லியரிசியாகிய உணவுண்ணும் மனைவியினுடைய நிலை நோக்கத்தக்கது. இது போன்று கைம்பெண்கள் பற்றிய குறிப்புகள் புறநானூற்றில் ஒன்பது பாடல்களில் (புறம்.25,125,237,238,246,250,261,273,280) காணமுடிகிறது

இதில் கைம்மை நோன்புக் காலத்தில் பெண்கள் மேற்கொள்ளும் சமூகக் கட்டுப்பாடுகள் ஒப்பனை நீக்கம், உணவு நீக்கம், பழக்கநீக்கம் என்ற மூன்று நிலைகளில் காணப்படுகின்றன. பெருங்கோப்பெண்டு பாடல் உணவுக்கட்டுப்பாட்டிற்குச் சான்றாகிறது. தாயங்கண்ணியார் பாடல் ஒப்பனை நீக்கத்திற்கும் விருந்தோம்பல் பழக்கம் புறக்கணிக்கப்பட்டதற்கும் சான்றாகின்றது. கைம்மை நோன்பு நோற்பதும் உடன்கட்டை ஏறுவதும் பெண் சமூகத்திற்கு மட்டுமே இழைக்கப்பட்ட அநீதி ஆதலால் இதனை சமூக உளவியலாகக் கொள்ளமுடிகிறது. மேலும் பெருங்கோப்பெண்டு பெரிய தோளையுடைய எம் கணவன் இறந்தபிறகு, மலர்ந்த தாமரைகள் நிறைந்த நீர் செறிந்துள்ள பெரிய பொய்கையும் கரிய விறகால் அடுக்கப்பட்ட பிணப்படுக்கையாகிய தீயும் ஒரு தன்மையதே ஆகும் என்று கூறுவதனால் கணவனை இழந்த பிரிவுத்துயரம் தனிமனித உளவியலுக்கு சான்றாகின்றன. இதனை,

''. . . . எமக்குஎம்
பெருந்தோள் கணவன் மாய்ந்தென அரும்புஅற
வள் இதழ் அவிழ்ந்த தாமரை
நள் இரும் பொய்கையும் தீயும் ஓரற்றே! (புறம். 246)

என்னும் அடிகள் மூலம் உணரமுடிகிறது.

மாறிவரும் இன்றைய சமுதாயத்திலும் கைம்பெண்களுக்கு தொடர்ந்து அநீதிகள் இழைக்கப்பட்டு வருகின்றன. கணவன் இறந்த இறப்புச் சடங்கின்போது மனைவியின் கூந்தலில் உள்ள பூக்களைக் களைதல், குங்குமத்தை அழித்தல், வளையல்களை உடைத்தல் போன்ற சடங்குகள் நிகழ்த்தப்படுகின்றன. மேலும் திருமண வீடுகளில் தன்மகளுக்கே திருமணம் நடந்தாலும் முன் நிற்பதைத் தடுத்தல், மங்கல காரியங்களுக்கு அழைத்துச் செல்லாமை, வெளியில் கிளம்பும் போது எதிர்ப்படாமை போன்ற மூடநம்பிக்கைகளும் பின்பற்றப்படுவதைக் காணமுடிகிறது.

## தந்தையை இழந்த பெண்களின் நிலை

கடையேழு வள்ளல்களில் வேளிர் குலத்தலைவனும் பார் போற்றும் முதல்வனாகப் புகழப்படுபவன் பறம்பு மலையை ஆண்ட பாரிவேள் ஆவான். ஓரறிவு உயிரான முல்லைக்கொடிக்கு தன் அழகிய தேரினைப் பரிசளித்து எல்லையில்லாப் பெருமை கொண்டவன் பாரி வள்ளல். பாரியின் புகழ் மூவேந்தர் புகழைவிட மேம்பட்டு நின்றது. பாரியின் புகழ் பெருகுவது கண்டு அழுக்காறு கொண்ட மூவேந்தர்கள் அவனது இரு பெண்களையும் மணம் பேசத் தூதனுப்பினர். பாரி மறுத்தான். அவன் அவ்வாறு மறுப்பான் என்பதை அறிந்தே மூவேந்தர் தூதனுப்பினர் (புறம் 109 - 111). நல்ல காரணம் கிடைக்கவே மூவர் படையும் ஒன்று சேர்ந்து பறம்புமலையைச் சுற்றிலும் வளைத்துக் கொண்டன. முற்றுகை தொடர்ந்து. ஆனால் முடிவு கிடைக்கவில்லை. மலையடிவாரத்தில் எவரேனும் வருவார்கள். அவர்களைச் சிறைபிடித்தாவது பறம்பு நாட்டைக் கைப்பற்றலாம் என்று நினைத்ததும் பொய்த்துப்போனது. 'பாரியின் நாட்டுமக்கள் பொருள்கள் வாங்கவும், விற்கவும் வெளியே வரவேண்டிய அவசியம் ஏற்படவில்லை. அவர்கள் செழிப்பாக வாழ்கிறார்கள். பறம்பு நாட்டின் வளம் நாளும் பெருகிக் கொண்டே வருகிறது (புறம் 109). மேலும் வாள்போரில் பாரிக்குத் தோல்வி கிடையாது. பாரிவேள் ஆடல்களைக் கண்டும் இசையுடன் பாடல்களைக் கேட்டும் மகிழ்ச்சியாக இருக்கின்ற

செய்தியைத் தரும் பாடல் எதிரிகளுக்கு மீண்டும் கோபத்தை உண்டாக்கியது. சேர, சோழ, பாண்டியர் ஆகிய மூவரும் பாரியின் கோட்டையை முற்றுகையிட்டனர்.

போரிட்டு வெல்வது கடினம் எனக் கருதிய பாண்டியன் சூழ்ச்சியால் பாரியை வெல்லத் திட்டமிட்டான். பரிசில் பெறச் செல்லும் பாணர்களைப் போன்று வஞ்சக வேடம் பூண்ட ஒற்றர்கள் யாழிசையாலும் ஆடல் பாடல்களினாலும் பாரியைப் புகழ்ந்து போற்றினர். மகிழ்ச்சிக் கடலில் மிதக்கும் தருணம் நோக்கி மாறுவேடத்தில் வந்த ஒற்றர்களில் ஒருவன் ஒளித்து வைத்திருந்த கூர்வாளால் பாரிவேளைக் கொலை செய்தான். பாண்டியனின் கோழைவீரன் திட்டமிட்டபடி கொலை செய்துவிட்டு ஓடி ஒளிந்து கொண்டான் (அதே நிலா, புவியரசு, பக்.82 - 83). ஊர்மக்கள் பாரியின் பிரிவால் கதறி அழுதனர். இத்துக்கச் செய்தியை அறிந்த கபிலரும் ‘அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ்’ என்பதற்கிணங்க கதறி அழுதார். பாரியோடு வாழ்ந்த கபிலரும் தம் உயிரையும் போக்கிக்கொள்ளத் துணிந்தார். ஆனால் பாரியின் மகளிர் திக்கற்று நிற்கும் நிலையில் தாம் உயிர்விடுவது தகாதென எண்ணினார். அவர்கள் இருவருக்கும் தக்க கணவரைத் தேர்ந்தெடுத்து மணமுடிக்கும் பெருங்கடமை தமக்கிருப்பதை எண்ணினார். அழுது புலம்பிக் கொண்டிருந்த மகளிர் இருவரையும் தேற்றி பறம்பு மலையைவிட்டு புறப்பட்டார். ‘பறம்பு மலையே! நாங்கள் செல்கின்றோம்’ என்று அம்மலையில் வழிந்தோடும் அருவி போல கண்ணீர் இழிந்தோட அதனிடம் விடைபெற்றுச் சென்றனர். தாம் இதுவரை பிரிந்தறியாத தங்கள் மலையைவிட்டுப் பிரியும் அந்தத் தருவாயில் தந்தையின் பிரிவுத் துயரில் மகளிர் கையற்றநிலையில் ஒரு பாடலைத் தருகின்றனர்.

‘‘அற்றைத் திங்கள் அவ்வெண் ணிலவின்
எந்தையும் உடையேம்; எம்குன்றும் பிறர்கொளார்;
இற்றைத் திங்கள் இவ்வெண் ணிலவின்
வென்றெறி முரசின் வேந்தர்எம்
குன்றும் கொண்டார்யாம் எந்தையும் இலமே’’ (புறம்.112)

என்று வாய்விட்டுக் கதறுகின்றனர். ‘பகைவர் முற்றுகை இட்டிருந்த சென்ற திங்களின் முழுநிலாவிலே எங்களின் தந்தையை உடையேமாய் இருந்தோம். இத்திங்களின் இவ்வெள்ளிய நிலாவின் கண்ணே வென்று அறைந்த முரசினையுடைய அரசர் எம்முடைய மலையையும் கொண்டார். நாங்கள் எங்களின் தந்தையையும் இழந்தோம்’ என்று ஏங்கி அழுத வண்ணம் அம்மலையை விட்டு நீங்கிச் செல்கின்றனர்.

பாரி மகளிரின் இப்பாடல் மூவேந்தர்கள் நாட்டை விரிவாக்கும் வெறியில் புகழ்பெற்ற பழங்குடி மன்னர்களை எல்லாம் ஒருவர் பின் ஒருவராக அழித்து பேரரசு ஆதிக்கத்தை நிறுவ முயன்ற தன்மையைப் பறைசாற்றுகின்றது. இதில், ‘‘வென்றறி முரசின் வேந்தர்எம் குன்றும் கொண்டார்’’ என்ற வரிகள் சிறிய நாட்டைப் பெரிய நாடுகள் விழுங்குவது என்பது இன்றைய அரசியல் மட்டுமன்று; அன்றைய அரசியலும் அதுவே என்பதைக் காட்டுகின்றன. மூவேந்தர்கள் சிற்றரசர்களையும் வேளிர்களையும் அழித்து பேரரசு எல்லைக்குள் தமிழ் நிலப்பரப்பைக் கொண்டுவர மேற்கொண்ட சூழ்ச்சிக்கு இப்பாடல் சான்றாக அமைவதால் இதில் சமூக உளவியல் இடம் பெற்றுள்ளதை இனம் காணமுடிகிறது. மேலும்,

‘‘இற்றைத் திங்கள் இவ்வெண் ணிலவின்
வென்றெறி முரசின் வேந்தர்எம்
குன்றும் கொண்டார்யாம் எந்தையும் இலமே’’

என்ற வரிகள் தந்தையை இழந்த பெண்களின் ஆதரவற்ற உள்ளத்தையும் தாம் இதுவரை வளர்ந்த சொந்த நிலத்தையும் உறவுகளையும் மக்களையும் பிரிந்து அகதிகளாக வேற்றுப்புலம் நோக்கி புலம்பெயர்ந்து செல்லும் அவலநிலையையும் எடுத்தியம்புவது தனிமனித உளவியலுக்குச் சான்றாகிறது.

*பரிசிலர் நிலை*

‘‘ஈகை X இரவல் என்பது அற எதிர் இணைகளில் ஒன்று (Ethical binary opposition). இவற்றில் ஈகை புரியும் கரங்களோடு அறம், அதிகாரம், புகழ், செல்வம், ஊதியம் ஆகியன இணைகின்றன. ஈகை புரியாத கரங்களோடு மறம் புகழின்மை, வறுமை ஆகியன இணைகின்றன. ஈகையின்

*பெருமைக்கும் ஈயாமையின் சிறுமைக்கும் நிபந்தனையாக வருபவை பெறுகின்ற கரங்கள்'' என்பார் ராஜ் கௌதமன். (தமிழ்ச் சமூகத்தில் அறமும் ஆற்றலும், ராஜ் கௌதமன், ப.71)*

*சங்க காலச் சமூக வாழ்க்கை முறையை நாகரிக நிலையை 1.இனக்குழு குடிச் சமூக நாகரிகம் என்றும் 2.முடியாட்சி வர்க்க சமூக நாகரிகம் என்றும் வகுத்துக் கூறலாம். இனக்குழு சமூகத்தில் 'பாதீடு' என்னும் பகுத்துண்ணல், கூட்டுண்ணல் முறை காணப்பட்டது. சேகரித்த உணவைக் குடிகளுக்குள் கூறுபோட்டுப் பகிர்ந்து உண்ணும் வழக்கம் நிலவியது. ஊர் விழாக்காலங்களில் அல்லது தினை அறுவடை, வேட்டை ஆகிய நிகழ்வுகளில் விருந்தாக வந்தவர்களுக்கு உணவைப் பகிர்ந்துண்ணும் மரபு காணப்பட்டுள்ளது(புறம்.326). இத்தகு நாகரிகத்தில் பாணர், கூத்தர், பொருநர், விழாக்கால நிகழ்த்துகலைக் குடிகள் முக்கிய இடம் பெற்றிருந்தார்கள். வேட்டை மற்றும் பொதுவாக சேகரித்த உணவைப் பகிர்ந்துண்பது அவர்களின் கடமை என்று நினைக்கப்பட்டது. ஆனால் தருமச் செயல்களாகக் கருதப்படவில்லை.*

*ஆனால் முடிவேந்தர்களின் உடைமைச் சமூகத்தில் உடைமையாளர், உடைமை உரிமையற்றோர், உடைமை உருவாக்கத்தில் உற்பத்திச் சக்திகளாக இல்லாதோர் என்ற பாகுபாடு ஏற்பட்டது. இதில் உடைமை உரிமையற்றோரும், உடைமை உருவாக்கத்தில் உற்பத்திச் சக்திகளாக இல்லாதோரும் இரந்து கேட்க வேண்டிய நிலை வந்தது. அவர்களுக்குப் பொருளும், உணவும், உடையும் 'ஈகை' என்ற பெயரில் வழங்கிப் புகழ் ஈட்டும் புதிய சமூக அமைப்பு முறை தோன்றியது. ஈகை புரிதல் என்பது தலையான அறமாகியது. புலவர்களே அரசர்களிடம் ஈகை, புகழ், செல்வம் துய்த்தல் பற்றி விடாது வலியுறுத்தினார்கள். இனக்குழுச் சமூகத்தினரிடம் நெருக்கமான உறவுபூண்டு வந்த பாணர் முதலானோர் மன்னராட்சி உடைமைச் சமூகத்தில் காலங்கடந்த எச்சங்களாகிப் போனார்கள். வறுமைக் கூட்டங்களாக இவர்கள் ஊர் ஊராய் நடந்து திரிந்து அரசவை, அரண்மனை வாயில் ஆகிய இடங்களிலும் விழாக்களங்களிலும் தங்களது வித்தையைக் காட்டி பசியாறினர். இவர்களது வாழ்க்கை இரந்துண்டு வாழும் வாழ்க்கை போல ஆனது. ஆற்றுப்படைப் பாடல்களில் இவர்களது இரங்கத்தக்க நிலையைக் காணமுடிகிறது.*

*முடியாட்சி வர்க்க சமூக நாகரிகத் தோற்றத்தின் விளைவாக புகழ்பெற்ற இனக்குழு சமூகத்தின் குறுநில மன்னர்கள் அழிக்கப்பட்டனர். பகுத்துண்ணும் மரபு இயல்பாகக் காணப்படும் இனக்குழு சமூகம் வேரறுக்கப்பட்டு பேரரசு சமூகம் உருவாகிய காலத்தில் தோன்றிய பாடல்களே ஔவையாரின் பாடல்கள் எனலாம். இனக்குழு சமூகச் சிற்றரசனான அதியனைப் பாடும்போது ஔவையார்,*

*''ஒருநாள் செல்லலம்; இருநாள் செல்லலம்;*
*பலநாள் பயின்று, பலரொடு செல்லினும்,*
*தலைநாள் போன்ற விருப்பினன் மாதோ'' (புறம்.101)*

*''உண்டாயின் பதங்கொடுத்து*
*இல்லாயின் உடன்உண்ணும்*
*இல்லோர் ஒக்கல் தலைவன்'' (புறம்.95)*

*''அலத்தற் காலை யாயினும் புரத்தல் வல்லன்'' (புறம்.103)*

*எனப் புகழ்ந்து பாடுகிறார். அதியன் மறவீரனாக இருந்த போதிலும் அவன் செய்த கொடையே அவன் புகழைப் பூமியில் நிறுத்தி உள்ளது எனலாம். மூவேந்தர்களைக் காட்டிலும் குறுநில வேந்தர்களைப் புகழ்ந்து பாடும் தன்மை சங்க காலப் புலவர்களிடம் அதிகம் காணப்படுகிறது. பழுத்த மரத்தைத் தேடி பறவைகள் சென்று சேரும் எனப் புலவர் மரபு இதனை வருணிக்கிறது. மலைநாட்டுச் சிற்றரசர் எழுவரை இணைத்துக் கொடை மடம் பட்ட 'கடையெழு வள்ளல்கள்' என்று பாராட்டினார்கள். வேந்தர்கள் கூட இவ்வாறு பாராட்டப்படவில்லை. இந்த வள்ளல்களின் கொடை மழை போலப் பயன்கருதிச் செய்யப்படாதது (புறம்.107) ; மறுமை என்ற இலாபம் கருதிச் செய்யப்படும் வாணிபம் போன்றதல்ல (புறம்.134); நால்வகைப் படையுடன் இருக்கும் வேந்தராக இருந்தாலும் அவர் பண்பில்லாதவராக இருந்தால் செல்வத்தை மதிக்கமாட்டேன் (புறம்.197) எனப் புலவர்கள் வேறுபடுத்திப் பாடினார்கள்.*

தனக்கு அரிதினும் அரிதாகிய நெல்லிக் கனியைக் கொடுத்த அதியமான் நெடுமான் அஞ்சியின் மறைவிற்கு வருந்தும் ஔவையார் தனக்கு அதியமான் செய்த சிறப்புக்களை விவரித்துக்கூறி வருந்துகிறார்.

சிறிய கள் பெறினே, எமக்கு ஈயும்; மன்னே!
பெரிய கள் பெறினே,
யாம் பாட, தான் மகிழ்ந்து உண்ணும்; மன்னே!
சிறு சோற்றானும் நனி பல கலத்தன்; மன்னே!
பெருஞ் சோற்றானும் நனி பல கலத்தன்; மன்னே!
என்பொடு தடி படு வழி எல்லாம் எமக்கு ஈயும்; மன்னே!
அம்பொடு வேல் நுழை வழி எல்லாம் தான் நிற்கும்; மன்னே!

சிறிதளவு கள் கிடைக்குமானால் அதனை முழுமையாக எனக்கு உண்ணக் கொடுத்துவிடுவான். பின்னர் பெருமளவு கள் கிடைக்குமாயின் வேண்டிய அளவு எனக்குக் கொடுத்து நான் உண்டு பாடக் கேட்டுக் கொண்டே அவனும் பருகுவான். ஆனால் சிறிதளவே உணவு இருக்குமாயினும் அதனை அனைவருக்கும் பங்கிட்டுத் தந்து தானும் உடனிருந்து உண்பான். பெருஞ்சோறு வழங்கினும் நன்றாகப் பலரும் உண்ணுமாறு வழங்குவான். அம்பும் வேலும் பாயும் இடங்களில் எல்லாம் அவன் என்னை ஒதுக்கிவிட்டு முன்சென்று நிற்பான் என்று பரிசிலராகிய தங்களைப் பேணிக் காக்கும் நிலையினை எடுத்தியம்புகிறார் ஔவையார்.

இப்போது அதியமானின் மார்பில் பாய்ந்த வேலானது பாணர்கள் உண்ணும் கலத்தைத் துளைத்துக் கொண்டு, இரந்துண்டு வாழ்பவர் கைகளைத் துளைத்துக் கொண்டும், அரிய சொற்களில் தேர்ச்சிப் பெற்று பாடும் புலவர்களின் நாவில் சென்று பாய்ந்துள்ளது. எங்களுக்கு இனிய துணைவனாக இருந்த எந்தை இப்போது எங்கே இருக்கிறானோ? அதியமானின் மறைவால் இனிப் பாடுபவர்களும் இல்லை; பாடுபவர்களுக்கு ஏதாவது ஒன்றையேனும் தருபவர்களும் இல்லை; இனி கொடுப்பவர் யாருமின்றிச் சாகும் உயிர் மிகப் பலவாக இருக்கும் எனப் பாடி வருந்துகிறார். இதனை,

அருந் தலை இரும் பாணர் அகல் மண்டைத் துளை உரீஇ,
இரப்போர் கையுளும் போகி,
புரப்போர் புன்கண் பாவை சோர,
அம் சொல் நுண் தேர்ச்சிப் புலவர் நாவில்
சென்று வீழ்ந்தன்று, அவன்
அரு நிறத்து இயங்கிய வேலே!
ஆசு ஆகு எந்தை யாண்டு உளன்கொல்லோ?
இனி, பாடுநரும் இல்லை; பாடுநர்க்கு ஒன்று ஈகுநரும் இல்லை;

என்ற வரிகள் காட்டுகின்றன.

மேற்காணும் ஔவையாரின் கையறுநிலைப் பாடலின் வழி இனக்குழு சமூக சிற்றரசர்களிடம் காணப்பட்ட கொடைப்பண்பு சமூகக் கடமையாகக் கொள்ளப்பட்ட தன்மையினையும் மூவேந்தர்களிடம் ஈகை என்பது புகழ் வேண்டி மேற்கொள்ளப்பட்ட அறவாணிபமாகப் பின்பற்றப்பட்ட தன்மையினையும் சமூக உளவியலாகக் காணமுடிகிறது. அதியமானின் மார்பில் பாய்ந்த வேலானது பாணர்கள் உணவுப் பாத்திரம் துளைத்து, இரப்போர் ஏந்திய இருகைகளைத் துளைத்து, சொல் நுட்பம் மிக்க புலவர்கள் நாவையும் துளைத்தது என்று புலவர் புலம்புகிறார். கொடைத் தன்மையைத் தனது கடமையாகக் கொண்ட அதியமான் இவ்வுலக வாழ்வை நீத்தபோது பரிசிலராகிய தங்களின் வாழ்வு ஆதரவற்ற நிலைக்குத் தள்ளப்பட்டதாக ஔவையார் இரங்குவதால் இதனைத் தனிமனித உளவியலாகக் காணமுடிகிறது.

முதுமையில் இளமையை நினைவுகூர்தல்

தண்டுகால் ஊன்றித் தளர்ந்து நடக்கும் காலத்தில் முதியவர் ஒருவர் தன் சின்னஞ்சிறு வயதில் குளத்தில் குதித்து, ஆழத்தில் மணல் எடுத்துக் கரையில் நிற்போர்க்குக் காட்டிய இளமையான நாள்களை நினைத்துப் பார்ப்பதாக ஒரு கையறுநிலைப் பாடல் புறநானூற்றில் உள்ளது. இப்பாடலைப் பாடிய புலவரின் பெயர் தெரியவில்லை. அவர் கையாண்டுள்ள ‘தொடித்தலை விழுத்தண்டு’ என்ற அழகான தொடரைக் கொண்டு இப்புலவரைத் ‘தொடித்தலை விழுத்தண்டினார்’ என்று நம் முன்னோர்கள் பட்டப்பெயராகச் சுட்டி அழைத்தனர். அப்பாடல்,

*''இனிநினைந்து இரக்க மாகின்று, திணிமணல்*
*செய்வுறு பாவைக்குக் கொய்பூத் தைஇத்*
*தண்கயம் ஆடும் மகளிரொடு கைபிணைந்து*
*தழுவுவழித் தழீஇத் தூங்கிவழித் தூங்கி*
*மறைஎனல் அறியா மாயமில் ஆயமொடு*
*உயர்சினை மருதத் துறையுறத் தாழ்ந்து*
*நீர்நணிப் படிகோடு ஏறிச் சீர்மிகக்*
*கரையவர் மருளத் திரையகம் பிதிர*
*நெடுநீர்க் குட்டத்துக் துடும்எனப் பாய்ந்து*
*குளித்துமணல் கொண்ட'' (புறம்.243)*

*வயதான காலத்தில் முதியவர் ஒருவர் அன்றைய நிலையை நினைத்துப் பார்க்கிறார். அது அவருக்கு இரங்கத்தக்கதாக உள்ளது. மணல் மேட்டிலே பாவை வைத்துப் பூச்சூட்டி விளையாடும் கள்ளங்கபடம் இல்லாத சிறுமியரோடு கைகோத்து, அவர்கள் தழுவியபோது தழுவி, தூங்கியபோது தூங்கி விளையாடிய காலம் இனி வருமா? நீண்டு உயர்ந்த மருத மரத்தின் கிளைகளில் ஏறி, குளத்தின் நீரைத் தொடும் தாழ்ந்த கிளைகளில் வந்து குளத்தில் துடும் எனப் பாய்ந்து, குளத்தின் அடிமட்டத்தில் உள்ள மணலை எடுத்துவந்து கரையில் இருக்கும் என் தோழர்கள் மருள, அலைகள் சிதற வந்து காண்பிப்பேனே! அந்த இளமை இப்பொழுது எங்கே சென்றதோ! என வருந்துகிறார். இங்கே புலவர் அறியாப் பருவ நிகழ்ச்சிகளைப் பின்னோக்கு உத்தியாக எண்ணிப் பார்க்கிறார்.*

*இதில் தனது இளமைக்கால சிறு கூட்டத்தின் செயல்பாடுகளை நம் கண் முன்னே கொண்டு வருகின்றார். இக்கருத்தினை ஒத்த புறநானூற்று 11ஆவது பாடல்,*

*''வரிமணற் புனைபாவைக்குக்*
*குலவுச்சினைப் பூக்கொய்து'' (புறம். 11)*

*என்ற பாடல் வண்டலினால் செய்த பாவைக்கு வளைந்த கோட்டுப் பூவைப் பறித்துச் சூட்டியதாகக் குறிப்பிடுகின்றது. நற்றிணை,*

*''நெடுநீர்த் தண்கயம் துடுமெனப் பாய்ந்து*
*நாட் தொழில் வருத்தம் வீடச் சேண்சினை*
*இருள்புனை மருதின் இன்நிழல் வதியும்'' (நற்றிணை. 330)*

*என்ற பாடலும் மேற்சொன்ன கருத்தினை ஒத்து அமைகின்றன. இன்னும் இதுபோன்ற நிலைகள் கிராமப்புறங்களில் நிலவுகின்றன. பல சிறுமியர்கள் கைகோர்த்து அவர்கள் அசைந்தபோது அசைதல், தழுவியபோது தழுவியது என்ற விழுத்தண்டினாரின் அனுபவத்தைப் படிக்கின்றபோது, நமக்கு நம் பருவகாலத்தில் ஆண் பெண் கைகோர்த்து நின்றுகொண்டு,*

*''பூப்பறிக்க வருகிறோம், பூப்பறிக்க வருகிறோம்*
*எந்த மாதத்தில் எந்த மாதத்தில்*
*ஏப்ரல் மாதத்தில் ஏப்ரல் மாதத்தில்''*

*என்ற பாடலைப் பாடிக்கொண்டே விளையாடிய நினைவுகளையும் ஆளுக்குப் பிடிஅரிசிவீதம் கொண்டுவந்து கூட்டாஞ்சோறுசெய்து, களிமண்ணால் சிலைசெய்து அச்சிலைக்கு அரளிப்பூ மாலைச்சூட்டிப் பொங்கலைப் படையல்செய்து பின் ஆளுக்கொரு உருண்டையாகச் சாப்பிட்ட நினைவுகளை இப்பாடல் நினைவுகூர வைக்கிறது. இது அனைத்துச் சமூகத்திற்குமான பொதுவான நிகழ்வு ஆதலால் இதனைச் சமூகத்தின் செயலாகக் கொண்டு இச்செயலைச் சமூக உளவியலாகக் கொள்ளலாம். ஆனால் இன்றையக் காலத்தில் குழந்தைகள் முதல் இளைஞர்கள் வரை ஊடகங்களில் ஒன்றியிருக்கின்றார்களே தவிர, அவர்கள் தண்டூன்றுகின்ற நிலை வருகின்றபோது தன்னை உணர்ந்து பார்ப்பதற்கான சுவடுகள் இல்லை எனலாம்.*

*இளமைக்கால நிகழ்வுகளை எடுத்துக்கூறிய விழுத்தண்டினார் தனக்கு முதுமை வந்தபோது உடல் தளர்ச்சியுற்றுப் பூண்கட்டப்பட்ட தண்டுக்கோலை ஊன்றிநடக்கும் நிலையினையும், பேசும்போது இடையிடையே இருமல் மற்றும் சில சொற்களையே பேசும் ஆற்றல் ஆகிய நிலைகளை உணர்ந்து இத்தனை விளையாட்டுக் குறும்புகளைச் செய்த அந்த இளமை தற்போது எங்கு இருக்கிறது. இப்படி முதுமை வந்துற்றதே என்று நினைவுகூர்வதைப் பின்வரும் பாடலடிகள் காட்டுகின்றன.*

''. . . .கல்லா இளமை
அளிதோ தானே யாண்டுண்டு கொல்லோ?
தொடித்தலை விழுத்தண்டு ஊன்றி நடுக்குற்று
இருமிடை மிடைந்த சிலசொல்
பெருமூ தாளரேம் ஆகிய எமக்கே'' (புறம்.243)

விழுத்தண்டினார் முதுமைக்காலத்தில் தனது இளமைப்பருவ நினைவுகளை மனதில் கூறுபோட்டுப் பார்த்து கழிந்த பருவங்களைத் தன்னிரக்க உணர்வோடு வெளிப்படுத்தும் பாங்கைத் தனிமனித உளவியலாகக் காணமுடிகிறது.

இதே போன்று பட்டினத்தாரும் இளமைப் பருவம் சென்று முதுமையடைந்த நிலையில் வருந்துவதைப் பின்வரும் பாடல் புலப்படுத்தகின்றது.

''வளமையுமாறி இளமையுமாறி வன்பல்விழுந்திரு
கண்களிருண்டு வயதுமுதிர்ந்து நரைதிரை வந்து
வாதவிரோத குரோதமடைந்து –
செங்கையினிலோர் தடியுமாகயே'' (பட்டினத்தார் பாடல்கள்,12)

புறநானூற்றில் மனித உள்ளத்தைப் பாதித்த கருத்துக்கள் பயின்று வந்துள்ள தன்மை காலச் சூழலுக்கேற்ப உளவியல் சிந்தனையுடன் தூவப்பட்டுள்ளது. கால மாற்றத்தாலும் அறிவு வளர்ச்சியாலும் சமூக அமைப்பு மாறும் போது பெண் குறித்த சிந்தனையிலும் மாற்றம் நிகழ்தல் வேண்டும் என்ற உண்மையினையும் ஆதிக்கப் போட்டியற்ற சமூகமே உலகை உய்விக்கும் உயர்ந்தநெறி, மனிதன் தனக்கென மட்டும் வாழாது பிறர்க்கென வாழ்வதே பிறந்ததின் பயன் என்ற சிந்தனையையும் சமூகத்தைச் சார்ந்தே தனிமனிதனின் உணர்வும் வாழ்வும் அடங்கியிருக்கின்றன என்பதனையும் கழிந்த பருவங்களை நினைவுக்கூர்ந்து போன வாழ்வு எப்போதும் மீண்டும் வராது என்ற தெளிவினையும், இப்பாடல்கள் நமக்குக் காட்டிநிற்கின்றன. மனவோட்டத்தின் பல்வேறு போக்குகளைப் புதிய சிந்தனையுடன் கற்பனை விழுது கலவாமல் அரிய உண்மைகளை எடுத்துரைக்கும் பாடல்களைக் கொண்டதாலே புறநானூறு சிறந்த செவ்வியல் இலக்கியமாக திகழ்கிறது என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

துணை செய்த நூல்கள்


1. இரவிச்சந்திரன்,தி.கு., சிக்மண்ட் ஃப்ராய்ட் உளப்பகுப்பாய்வு அறிவியல், , அலைகள் வெளியீட்டகம், சென்னை,1995.
2. ஞானசம்பந்தன், அ.ச., மகளிர் வளர்த்த தமிழ், கங்கை புத்தக நிலையம், சென்னை,1994.
3. நாகராஜன், கல்வி உளவியல், ஸ்ரீராம் பதிப்பகம், சென்னை,2020.
4. புவியரசு, அதே நிலா, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை,2013.
5. ராஜ் கௌதமன், தமிழ்ச் சமூகத்தில் அறமும் ஆற்றலும், விடியல் பதிப்பகம், கோவை, 2008)


********* ********* ********** ********* ********* ********** ********** **********